1984 பிப்ரவரி 18]

(முற்பகல் 9-20)

திரு. ஏ. தங்கராசு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் புதிய கட்டிடம் கட்டுவதற்கு ஏற்பாடு செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்று தெரிவித்தார்கள். ஆனால் குறிஞ்சிப்பாடி பகுதியில் பஸ், லாரி போன்றவற்றின் காரணமாக விபத்தில் பாதிக்கப் பட்டவர்களை ஒவ்வொரு தரமும் கடலூருக்குத்தான் எடுத்துச் செல்ல வேண்டிய நிலைமை இருக்கிறது. இப்படிப்பட்ட பிணங்களை எடுத்துச்செல்ல யாரும் முன்வருவது இல்லை. ஆகவே, உடனடியாக புதிய கட்டிடம் ஒன்றைக் கட்டித்தர அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : தலைவர் அவர்களே, இன்னும் 3 மாதத்தில் அந்தக் கட்டிடம் அங்கே இருக்கும்.

இராமேஸ்வரம் நகரியத்தை நகரசபையாக்கும் திட்டம்.

66 (*வினா எண் 19982)—திரு. த. இராமசாமி : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

இராமேஸ்வரம் நகரியத்தை நகரசபையாக ஆக்கும் செயற் குறிப்பு அரசிடம் உள்ளதா?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : ஆம்.

திரு. உ. சுப்பிரமணியன் : பேரவைத் தலைவர் அவர்களே. 'ஆம்' என்றால் எப்போது என்று அறிய விரும்புகிறேன், ராமேஸ்வரம் ஒரு சரித்திர பிரசித்தி பெற்றதும், பில்கிரிம் சென்டரும் ஆக இருப்பதால், விரைவில் அதை அமுல்படுத்த அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு நகரியத்தை நகராட்சியாக மாற்ற வேண்டும், அல்லது ஒரு ஊராட்சியை பேரூராட்சியாக மாற்றவேண்டும், ஒரு பேரூராட்சியை நகராட்சியாக மாற்றவேண்டும் என்பது எல்லாம் நிதிநிலைமைகளைக் கணக்கில் கொண்டு தான் செய்கிறோம். ஆகவே, ஆண்டு வருமானம் சுமார் 5 இலட்சம் இருந்தால் தான் நகராட்சியாக மாற்ற முடியும். ஆகவே, அது அரசின் பரிசீலனையில் இருந்து வருகிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்கிறபோது, அது ஒரு சரித்திரப் பிரசித்தி பெற்ற நகரம், கோயில் ஸ்தலம், புண்ணிய ஸ்தலம் என்றெல்லாம் சொன்னார்கள். அவற்றையும் கருத்தில்கொண்டு தான் அரசு பரிசீலித்து வருகிறது.

திரு. பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்த நகரியத்தை நகராட்சியாக மாற்றவேண்டும் என்று சர்வ கட்சியைச் சேர்ந்த — அண்ணா திராவிட முன்னேற்றக்கழகம், இந்திரா காங்கிரஸ் உள்பட —

தூது கோஷ்டி ஒன்று வந்து அரசாங்கத்திடம் கோரிக்கையைக் கொடுத்துள்ளது. அப்போது அது குறித்த முடிவு சீக்கிரம் செய்யப்படும் என்று சொன்னார்கள். அந்த வாக்குறுதி உடனடியாக நிறைவேற்றப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் சீக்கிரம் என்று சொல்லவில்லை. அரசின் பரிசீலனையில் இருந்து வருகிறது என்று தான் சொன்னேன். குறிப்பாக தமிழகத்தில் பல்வேறு கோயில் ஸ்தலங்கள், புண்ணிய ஸ்தலங்கள் நகரியமாக இருக்கின்றன. அவற்றையெல்லாம் நகராட்சியாக மாற்றவேண்டும் என்பதாலும், அந்த பிரசித்தி பெற்ற புராதன கோயில் ஸ்தலங்களைக் காப்பாற்றவேண்டிய பெரும் பொறுப்பு அரசுக்கு இருக்கிறது என்பதாலும், வடக்கே காசி என்றால், தெற்கே ராமேஸ்வரம் என்று இருப்பதாலும், அந்தக் கோயில் ஸ்தலங்களைக் காப்பாற்றவேண்டிய முறையில் இந்த அரசு நடவடிக்கை எடுத்து வருகிறது. அதற்காக பல்வேறு நடவடிக்கைகளை எடுத்து வருகிறது. பராமரிப்புப் பணிக்காக பணம் ஒதுக்கப்படுகிறது. எனவே, இவைகளையெல்லாம் மனதில் கொண்டு அதை நகராட்சியாக மாற்ற வேண்டிய முடிவு எடுக்க வேண்டியிருக்கிறது.

திரு. என். பழனிவேல் : பேரவைத் தலைவர் அவர்களே, மதுரை மாவட்டத்தில் இருக்கும் கொடைக்கானல் நகரியமாக இருந்து கொண்டு இருக்கிறது. அங்கே லட்சக்கணக்கான யாத்ரிகர்கள் வருகிறார்கள். அவர்களுக்கு எந்தவித வசதியும் இல்லை.....

மாண்புமிகு பேரவைத் தலைவர் : துணை வினாக்கள் மூலக் கேள்வியை ஒட்டியதாக இருக்கவேண்டும். சட்டமன்ற உறுப்பினர்கள் தமிழ்நாடு முழுவதும் உள்ள பிரச்னைகளைக் குறித்து வினா எழுப்பலாம் என்பதற்காக, தமிழ்நாட்டிலுள்ள எல்லா நகரியங்களைக் குறித்தும் கேட்க அனுமதிக்க முடியாது.

நகராட்சி நிதி கார்ப்பரேஷன் என்ற அமைப்பை ஏற்படுத்தும் திட்டம்.

67 (*வினா எண் 20494)—திரு. சி. கணேசன் மற்றும் திரு. பெ. சு. திருவேங்கடம் : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நிதி பற்றாக்குறையாக உள்ள நகராட்சிக்கு நிதி உதவி செய்வதற்காக, ''நகராட்சி நிதி கார்ப்பரேஷன்'' என்ற அமைப்பை உருவாக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில் அதன் விவரம் என்ன?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : (அ) மற்றும் (ஆ) ''நகராட்சி நிதி கார்ப்பரேஷன்'' என்ற அமைப்பை ஏற்படுத்த அரசு ஒப்புதல் அளித்துள்ளது.